Registered as a News Paper    பக்கங்கள் 4    விலை ரூபா: 5-00

நல்லூர் இளை நூலகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    மாசி 24    [07 - 3 - 1993]    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 17

## புற்று நோயாளர் தொகை இரட்டிப்பாக அதிகரிப்பு

யாழ். குடாநாட்டில் புற்று நோயாளரின் தொகை 1991ஆம் ஆண்டை விட 1992 ஆம் ஆண்டு இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. 1991ஆம் ஆண்டு மொத்தப்புற்றுநோயாளரின் தொகை 585 ஆகவும், 1992 ஆம் ஆண்டு 1000 மேல் ஆகவும் காணப்பட்டது. 1992 இல் குருதி புற்றுநோய் 204 ஆகவும் இனப்பெருக்க உறுப்புப் புற்றுநோய் 192 ஆகவும், குடல்உணவுதொகுதி புற்றுநோய் 184 ஆகவும், மார்புஉறுப்புப் புற்றுநோய் 181 ஆகவும், வாய்ப்புற்றுநோய் 176 ஆகவும், சுவாசத் தொகுதிப் புற்றுநோய் 36 ஆகவும், ஏனைய புற்றுநோய் 27 ஆகவும் உள்ளதாக தெரிய வருகின்றது. புற்றுநோயாளர் சிகிச்சைபெற வரும்போது நோய்முற்றிய நிலையில் வருவதால் அநேகர் மரணம் அடைகின்றனர். [4 ஆம் பக்கம் பார்க்க]

# குடாநாட்டு உணவு நெருக்கடி; ஜனாதிபதி - அரச அதிபர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் நிலவிவரும் உணவு நெருக்கடி மற்றும் சீரற்றிருக்கும் அத்தியாவசிய சேவைகள் குறித்து சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுடன் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இச்சந்திப் பின்போது குடாநாட்டில் தற்போது நிலவிவரும் உணவு நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கும் சீரற்றிருக்கும் அத்தியாவசிய சேவைகள் சிலவற்றை சீராக்குவதற்கும் வேண்டிய சில நடவடிக்கைகள் எடுப்பது குறித்து முடிவெடுக்கப்பட்டதாக அரச அதிபர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் திரும்பிய அரச அதிபர் மேற்படி பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்பட்ட சில முடிவுகள் குறித்து விபரித்தார்.

### உணவு:

குடாநாட்டில் தற்போது நிலவும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் பற்றாக்குறையை நீக்குவதற்காக தற்போது கப்பல்களில் எடுத்து வரப்படும் உணவுப் பொருள்கள் பயன்படுத்தப்படும். இதைத் தொடர்ந்து மேலும் சுமார் மூன்று மாதங்களிற்கு குடாநாட்டு மக்களின் உணவுத்தேவையைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான உணவுப் பொருள்களைக்களஞ்சியப் படுத்துவதற்கு நடவடிக்கை [4 ஆம் பக்கம் பார்க்க]

## பொருள்கள் மீதான தடை நீக்கப்படமாட்டாது

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு எடுத்துச்செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள மருந்துப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய மருந்துவகைகளை வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

கொழும்பில் ஜனாதிபதியுடனும், அரசின் ஏனைய அதிகாரிகளுடனும் நடாத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து மருந்துப்பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாகக்கூறப்பட்டது. எனவே தனியார்வியாபாரிகளும், பார்மஸிஉரிமையாளர்களும் தடை செய்யப்பட்ட மருந்துப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய மருந்துப்பொருள்களைத் தேவையான அளவில் வடபகுதிக்கு எடுத்துச்செல்லமுடியும் என்று கூறப்படுகிறது. (க)

## துறைமுகம் திருத்த அனுமதி சீமெந்திற்கு அனுமதியில்லை

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை துறைமுக இறங்கு துறையைத் திருத்தி அமைப்பதற்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம்அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு சென்றிருந்த யாழ். அரசாங்க அதிபர் அரசின் உயர் அதிகாரிகளுடன் மேற்படி விடயம் குறித்து நடாத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இவ் அனுமதி கிடைத்ததாக அரச அதிபர் தெரிவித்தார். எனினும் இவ் இறங்குதுறையை திருத்தி அமைப்பதற்கு வேண்டிய போதியளவு சீமெ

## கூமணவிலிருந்து பொருள்கள் இறக்குவதில் தாமதம்

## மீட்புநிதி சேகரிப்பு

நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் இன்று காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணிவரை மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை மீட்புநிதி செலுத்த தவறியோர் இக் குறித்த நேரத்தில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியுமென தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

## தமிழ்இளைஞரை பயமுறுத்தி பொலிஸ் அதிகாரி லஞ்சம்

கொட்டாஞ்சேனை பொலீஸ் பகுதியை சேர்ந்த பொலீஸ் அதிகாரி ஒருவர் லஞ்சம் பெற முயன்ற போது கிரான்ட்பாஸ் பொலீசாரால் கைது செய்யப்பட்டார்.

கொட்டாஞ்சேனை பொலீஸ் நிலையத்தைசேர்ந்த பொலீஸ் அதிகாரி ஒருவர் தமிழ் இளைஞர் ஒருவரைப் பயமுறுத்தி பணம்பறிக்க முற்பட்டாரென்றும், அச் சமயம் அவரிடம் வந்த கிரான்பாஸ் பொலீஸ் நிலையத்தைசேர்ந்த பொலீஸாரால் கைது செய்யப்பட்டாரென்றும் இச் சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## வாகரைப் பகுதியிலிருந்து 7முகாம்கள் அகற்றப்பட்டன

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஏழு சிறிலங்கா இராணுவமுகாம்கள் அகற்றப்பட்டுள்ளன.

... சோலைப் பகுதியிலும் உன்னிச்சைப் பகுதியிலும் புதிதாக இராணுவமுகாங்கள் அமைப்பட்டன.

## கடற்படையின் பாதுகாப்பில் றோகணாவின் குடும்பம்

(கொழும்பு)

திருக்கோணமலை கடற்படை முகாமில் முன்னாள் ஜே. வி. பி. தலைவரின் குடும்பத்தினரை பாதுகாப்பில் வைத்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜே. வி. பி. முன்னாள் தலைவர் றோகண விஜேவீரவின் மனைவி சித்ராங்கி விஜேவீரவையும் அவரது ஐந்து பிள்ளைகளையும் தற்போது திருக்கோணமலை கடற்படை முகாமில் உள்ள வீடொன்றில் மிகுந்த காவலில்வைத்திருப்பதாகவும், அவர்களை பார்வையிட குறிப்பிட்ட சிலருக்கே அனுமதி வழங்கப்பட்டதாகவும், மூன்று பிள்ளைகள் திருக்கோணமலை படையினரின் பிள்ளைகள் படிக்கும் பாடசாலையில் கல்வி பயிலுவதாகவும் தெரிய ( 4 ஆம் பக்கம் பார்க்க )

## சர்வதேச மகளிர் தின ஏற்பாடுகள் பூர்த்தி

[யாழ்ப்பாணம்]

அனைத்துலக மகளிர் தினம் நாளை தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்படவுள்ளது,

நாளை அனுஷ்டிக்கப்படவிருக்கும் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி கடந்த மாத ஆரம்பத்திலிருந்தே தமிழீழம் தயாராகி வருகிறது. இதற்கான ஏற்பாடுகளில் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு மற்றும் தமிழீழத்தின் பல்வேறு மாதர் அமைப்புக்கள் உட்பட பல பொதுசன அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளன. விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு இலக்கியப் போட்டிகளை நடாத்தியது. அத்துடன் பாடசாலை மாணவர்கள் மட்டத்திலும் ஏனைய இடங்களிலும் எழுச்சிக் கருத்தரங்குகள் பல நடாத்தப்பட்டுள்ளன.

இவற்றைவிட மகளிர் தினத்தையொட்டி தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளும் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளன.

பிரதான வீதிகள் தோறும் எழுச்சிக் கோஷங்கள் அடங்கிய வர்ணப் பதாகைகள் கட் (4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மக்கள் நிலை குறித்து ஆயர் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து கத்தோலிக்க திருச்சபை ஆயர் யாழ். வந்துள்ள ஐ. நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய பிரதிநிதியிடம் விரிவாக எடுத்து விளக்கினார்.

நேற்று யாழ். வந்துள்ள ஐ. நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய கொழும்பு வதிவிட பிரதிநிதி பீற்றர் நிக்கலஸை சந்தித்த ஆயர் யாழ். மக்களின் போக்குவரத்து மற்றும்யாழ். மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு உணவு நெருக்கடி குறித்தும் பிரச்சினைகள் குறித்தும் எடுத்து விளக்கினார்.

## தமிழீழ கல்வி பொதுத்தேர்வு; சிறப்புச்சித்தி

## நீக்கப்படமாட்டாது

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு எடுத்துச்செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள மருந்துப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய மருந்துவகைகளை வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

கொழும்பில் ஜனாதிபதியுடனும், அரசின் ஏனைய அதிகாரிகளுடனும் நடாத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து மருந்துப்பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாகக்கூறப்பட்டது. எனவே தனியார்வியாபாரிகளும், பார்மஸிஉரிமையாளர்களும் தடை செய்யப்பட்ட மருந்துப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய மருந்துப் பொருள்களைத் தேவையான அளவில் வடபகுதிக்கு எடுத்துச்செல்லமுடியும் என்று கூறப்படுகிறது. (க)

## துறைமுகம் திருத்த அனுமதி சீமெந்திற்கு அனுமதியில்லை

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை துறைமுக இறங்கு துறையைத் திருத்தி அமைப்பதற்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம்அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு சென்றிருந்த யாழ். அரசாங்க அதிபர் அரசின் உயர் அதிகாரிகளுடன் மேற்படி விடயம் குறித்து நடாத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இவ் அனுமதி கிடைத்ததாக அரச அதிபர் தெரிவித்தார். எனினும் இவ் இறங்குதுறையை திருத்தி அமைப்பதற்கு வேண்டிய போதியளவு சீமெந்து எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. சுமார் 50 பக்கட் சீமெந்து மட்டுமே எடுத்து வரப்பட்டுள்ளது. இதைக்கொண்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும் தேவைப்படும் சீமெந்து கொழும்பில் இருந்து எடுத்து வரப்படும் என்று அரச அதிபர் தெரிவித்தார். [ந]

## குமணவிலிருந்து பொருள்கள் இறக்குவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

குமணகப்பலிலிருந்து பொருள்களை இறக்கும் வேலை தாமதமடையுமென தெரியவருகிறது. தற்பொழுது குமாரி கப்பலிலிருந்து துரிதமாக பொருள்கள் இறக்கப்பட்டு வருவதாகவும் அவை முற்றாக இறக்கப்பட்டு முடிந்தபின்னரே குமண பருத்தித்துறை இறங்குதுறைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் குமாரி கப்பலிலிருந்து 580 மெற்றிக்தொன் பொருள்கள் ஒரேநாளில் இறக்கப்பட்டுள்ளது. இதுவரை இவ்வளவு தொகை பொருள்கள் ஒரே நாளில் இறக்கப்பட்டதில்லை என சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரதிநிதி தெரிவித்தார்.

... வரப்படும் உணவுப் பொருள்கள் பயன்படுத்தப்படும். இதைத் தொடர்ந்து மேலும் சுமார் மூன்று மாதங்களிற்கு குடாநாட்டு மக்களின் உணவுத்தேவையைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான உணவுப் பொருள்களைக்களஞ்சியப் படுத்துவதற்கு நடவடிக்கை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இலஞ்சம் பெற்ற மேஜர் பொலிசாரால் கைது

யாழ்ப்பாணத்திற்கு வாகன உதிரிப்பாகங்களை கடத்த உதவிய இராணுவ மேஜர் ஒருவர் இராணுவப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரது வீடு பொலிசாரால் சோதனையிடப்பட்ட

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழ் இளைஞரை பயமுறுத்தி பொலீஸ் அதிகாரி லஞ்சம்

கொட்டாஞ்சேனை பொலீஸ் பகுதியை சேர்ந்த பொலீஸ் அதிகாரி ஒருவர் லஞ்சம் பெற முயன்ற போது கிராண்ட்பாஸ் பொலீசாரால் கைது செய்யப்பட்டார்.

கொட்டாஞ்சேனை பொலீஸ் நிலையத்தைசேர்ந்த பொலீஸ் அதிகாரி ஒருவர் தமிழ் இளைஞர் ஒருவரைப் பயமுறுத்தி பணம் பறிக்க முற்பட்டாரென்றும், அச் சமயம் அவரிடம் வந்த கிரான்பாஸ் பொலீஸ் நிலையத்தை சேர்ந்த பொலீஸாரால் கைது செய்யப்பட்டாரென்றும் இச் சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## வாகரைப் பகுதியிலிருந்து 7முகாம்கள் அகற்றப்பட்டன

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஏழு சிறிலங்கா இராணுவமுகாம்கள் அகற்றப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் சிறிலங்கா இராணுவத்தினர் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடாத்தப் படுவதனாலும் இராணுவத்திற்கான விநியோகங்களில் ஏற்பட்ட இடர்களினாலுமே இவ் ஏழுமுகாம்களும் அகற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொக்கட்டிச் சோலைப் பகுதியிலும் உன்னிச்சைப் பகுதியிலும் புதிதாக இராணுவமுகாங்கள் அமைக்கப்பட்டன.

... ப்பு மற்றும் தமிழீழத்தின் பல்வேறு மாதர் அமைப்புக்கள் உட்பட பல பொதுசன அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளன. விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு இலக்கியப் போட்டிகளை நடாத்தியது. அத்துடன் ... த்தையொட்டி தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளும் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளன.

பிரதான வீதிகள் தோறும் எழுச்சிக் கோஷங்கள் அடங்கிய வர்ணப் பதாகைகள் கட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மக்கள் நிலை குறித்து ஆயர் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து கத்தோலிக்க திருச்சபை ஆயர் யாழ். வந்துள்ள ஐ. நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய பிரதிநிதியிடம் விரிவாக எடுத்து விளக்கினார்.

நேற்று யாழ். வந்துள்ள ஐ. நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய கொழும்பு வதிவிட பிரதிநிதி பீற்றர் நிக்கலஸை சந்தித்த ஆயர் யாழ். மக்களின் போக்குவரத்து மற்றும்யாழ். மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு உணவு நெருக்கடி குறித்தும் பிரச்சினைகள் குறித்தும் எடுத்து விளக்கினார்.

### தமிழீழ கல்வி பொதுத்தேர்வு; சிறப்புச்சித்தி

# மன்னார் மாணவர்களுக்கு பரிசளிப்பும் பாராட்டும்

(மன்னார்)

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்ட 1992ஆம் ஆண்டிற்கான தமிழீழ கல்விப் பொதுத் தேர்வில் மன்னார் மாவட்டத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்றமாணவர்களுக்கு தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் வழங்கப்பட்ட 5000 ரூபா பரிசும் சான்றிதழும் மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி ஜான் அவர்களால் வழங்கப்பட்டது. தேசியத் தலைவரின் வாழ்த்துச் செய்தியும் அங்கு வாசிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் பெரிய பண்டிவிரிச்சான் கொத்தணிப் பாடசாலையில் காலை பத்து மணிக்கு சித்தியடைந்த மாணவர்களும் பிரதம விருந்தினர்களும் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டனர். மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் திரு. நந்தகுமார் அவர்களால் தேசியக் கொடி ஏற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையின் சார்பில் திரு. நாவண்ணன் அவர்கள் கல்வியின் தன்மையையும் மாணவர்களின் நிலைமை பற்றியும் எடுத்துக் கூறியதோடு சித்தியடைந்த மாணவர்களையும் கௌரவித்துப் பேசினார்.

அடுத்து தேசியத் தலைவரின் வாழ்த்துச் செய்தி மகளிர் அமைப்புப்பொறுப்பாளர் செல்வி தேன்மொழி அவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நயினாதீவில் சிக்கியிருந்த சிறுமி யாழ். வந்தார்

(வடமராட்சி)

நயினாதீவில் நீண்ட மாதங்களாப் பெற்றோரைப் பிரிந்திருந்த பதினொரு வயது சிறுமி ஒருவர் 'குமாரி' கப்பல் மூலம்நேற்றுயாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

பாலசுப்பிரமணியம் பிரமிளா என்ற சிறுமியையே காங்கேசன்துறையில் இருந்து யாழ். அரச அதிபர் கூட்டி வந்தார். [30]

# இனப் பிரச்சினைத் தீர்வு; சுதந்திரக்கட்சி அலட்சியம்

### -பி.பி.சி. கருத்து

(லண்டன்)

தமிழரின் பிரச்சினைதொடர்பாகலண்டன்பி.பி.சி தமிழ்ச் சேவைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் அளித்த பேட்டி தொடர்பாக இன்னும் ஒரு கருத்தையும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவிக்காது விட்டுள்ளமைஇனப்பிரச்சினையில் சுதந்திரக்கட்சி அக்கறை காட்டவில்லை என்பதையே குறிக்கிறது என பி. பி. சி. கருத்துத் தெரிவித்துள்ளது.

நாட்டின் முக்கியமான பிரச்சினையைப் பிரதான எதிர்க்கட்சி அலட்சியம்செய்யக்கூடாதென்றும் பி. பி சி. மேலும் தெரிவித்தது. இதே வேளை இது தொடர்பான கருத்தைச் சுதந்திரக் கட்சியின் காலி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவிடம் கேட்டபோது,

மிக விரைவாக இதற்கான ஒரு தீர்வு வரவேண்டும் என்பதைத் தாம் விரும்புவதாகவும் மக்களின் பிரச்சினை தீர்க்கப் படுவதையே தாம் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

எப்படித் தீர்க்கப்படவேண்டும் என்ற கேள்விக்கு அவர் கருத்துக் கூற மறுத்துவிட்டாரென்றும் பி. பி. சி. தெரிவித்தது.

> **உளவாளிகள் !!!**
>
> **அவதானமாக இருக்கவும்...!**
>
> ஊருக்கு, தெருவிற்கு, புதியவராயின் யாரென்று அறிவது எம் கடமை.

போதை வஸ்து கோஷ்டியின்

## துப்பாக்கிச் சூட்டிற்கு கடுவெலவில் 7பேர் காயம்

(கொழும்பு)

கடுவெல வாராந்த சந்தையில் போதைப்பொருள் கடத்தும் இரகசிய கோஷ்டி ஒன்று மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் ஏழுபேர்படுகாயம் அடைந்துள்ளனர்.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது: கடுவெல சந்தையில் காலை துப்பாக்கி ஏந்திய நபர்கள் வாகனத்தில் வந்து கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்றும் இதில்பொருள்களை விற்பனை செய்யத் தயாராக இருந்த வியாபாரிகளில் ஐந்து பெண்களும், இரண்டு ஆண்களும் படுகாயம் அடைந்தனர் எனவும்தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தற்போது கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்தத் துப்பாக்கி நபர்களைத் தேடிதீவிர நடவடிக்கையில் பொலீசார் ஈடுபட்டு வருவதாகவும்தெரிய வருகின்றது. இவ்வாறான துப்பாக்கிப் பிரயோகம் அண்மையில் இரண்டு முறைநிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது போதைப் பொருள் விற்பனை செய்யும் இரண்டு குழுக்களின் வேலை என்றும் இதன் பின்னணி என்ன என்று

[4 ஆம் பக்கம் பார்க்க]

### ஓவியப் போட்டியில் பரிசு பெற்றார்

(யாழ்ப்பாணம்)

மகளிர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு நடாத்திய ஓவியப் போட்டி கீழ்ப்பிரிவில் ஆன் சோபனா ஜேசுதாசன், யாழ். திருக்குடும்பக்கன்னியர்மடம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். நேற்றைய பத்திரிகையில் வெளிவந்த பெயர் தவறாகும்.

## சிறப்பு தேர்ச்சி பெற்று பரிசு பெற்ற மாணவர் விபரம்

தமிழீழ கல்விப் பொதுத் தேர்வில் மாவட்ட ரீதியாக மன்னார் மாவட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பரிசில்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு;

முருகையா அன்ரனி ஜீவராணி - மன்னார் அரிப்பு ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, லூர்த்துநாயகம் கிளறின் நானாட்டான் மகாவித்தியாலயம், ஜோசேப் மேரி அன்ரனித்தா ஜெயந்தி - மன்னார் அரிப்பு ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, அதிதநாயகம் அல்தின் சசீகரன் மன்னார் நானாட்டன் மகா வித்தியாலயம், பாலசேகரம் டொறின் காமலித்தா மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம்.

## அதிபர்களின் மாதாந்தப்படி ஜனவரியிலிருந்து அதிகரிப்பு

(கொழும்பு)

அதிபர்களுடைய மாதாந்த படி (அலவன்ஸ்) ஜனவரி 93 இல் இருந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அனுப்பப்பட்ட கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தின் படி பாடசாலைகளின் வகைக்கு ஏற்ப பின்வரும் அடிப்படையில் மாதாந்த அலவன்ஸ் வழங்கப்படவுள்ளது.

தேசிய பாடசாலை 375 ரூபா. பாடசாலை வகை 1 ஏ பி அல்லது 1 சி 300 ரூபா பாடசாலை வகை இரண்டு 225 ரூபா. பாடசாலை வகை மூன்று 150 ரூபா.

## வரி விளம்பரம்

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

எங்களிடம் சகலரேடியோக்கள், ரேப் றெக்கோடர்கள், மற்றும் மின்சார உபகரணங்கள், எலெக்றோனிக் ஓட்டோ மற்றிக் கடிகாரங்கள், மேசை-சுவர் மணிக்கூடுகள் உத்தர வாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்; டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 3, கண்டி வீதி (இலங்கை வங்கி அருகாமையில்) சாவகச்சேரி. (சி-6082)

### வகுப்புகள்

தமிழ் ரைப்பிங் வார நாள், வார இறுதி வகுப்புகள் சிறந்த முறையில் நடைபெறுகின்றன SCHOOL OF BUSINESS AD MI IS RAT ON16, 3rd CROSS STREET JAFFNA (சி/6145)

### தேவை

சிறுவர்களின் சோட்ஸ், சேட், பெண்கள் கவுண் தைக்க தெரிந்த பெண்கள் தேவை. இன்றே தொடர்பு கொள்ளுங்கள்: ஜெகா தையல் அகம், 729 கே. கே. எஸ் றோட், யாழ்நகர் (யாழ். இந்துக் கல்லூரிக்கு முன்பாக.) (4410)

### விற்பனைக்குண்டு

நெஷனல் M-3 வீடியோ கமரா, ரெக்னிக், ஓடியோ ஸ்பீட் டப்பிங் டெக், குளிர் பானசாலைகளில், விளையாட்டு அரங்குகளில் வைக்கக்கூடிய பெரிய அளவிலான T.V. கேம் முதலியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மனோகரன், இல. 23 B.M.C ஒழுங்கை, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். (4070)

★ ★

கோல்டன்கொமற் முட்டை இடும் இளங்கோழிகள், தடுப்பு ஊசி போடப்பட்டவை. விற்பனைக்கு உண்டு. தொடர்பு; 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (4069)

### விறகு சிக்கனம்

சமையலுக்குச் சாண விராட்டி பாவித்து விறகுப் பாவனையைச் சுருக்குங்கள். மில்க்வைற். (சி- 6150)

### சேவை

றெனி மூக்குக் கண்ணாடியகம் உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடி சரியாக வழங்கப்படும். இல 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம் (சி-6156)

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

சென்மேரிஸ் சனசமூக நிலையம் கல்வி நிதிக்காக 28-02-93 இல் நடைபெறவிருந்த அதிஸ்ட்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 28-03-93க்கு பின்போடப்பட்டுள்ளது. தொடர்ந்து விற்பனை செய்யப்படும் சீட்டுகளும் செல்லுபடியாகும் என்பதைஅறியத்தருகிறோம்-செயலாளர் [4412]

### கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வீதியில் கண்டெடுக்கப்பட்டபெயர்ப் பலகையொன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும். இப் பெயர்ப் கையில் எஸ். எம். ஆலாலசுந்தரம் (சிறாப்பர்) என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கூட்டு வர்த்தகசபை கூட்டம்

சிறிலங்கா - இந்திய கூட்டு வர்த்தக சபையின் அடுத்த கூட்டம் நாளை திங்கட்கிழமையும், நாளை மறுதினம்செவ்வாய்க்கிழமையும் நடைபெற இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கூட்டத்தில் கலந்து கொள்வ+ற்காக இந்தியத்தூதுக்குழுவினர் நாளை கொழும்பு வரவுள்ளனர்.

## வேலை வாய்ப்பு

. அடிக்கும் நிற்றிங் மெசினில் [பின்னல் வேலை] வேலை செய்யத் தெரிந்தவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் வேலை வாய்ப்பு உண்டு.

**15-03-1993 ஆம் திகதிக்கு**

முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல - 184

மே/பா ஈழநாதம்.

(சி-6159)

## கலந்துரையாடல்

### மலேரியா தீவிரம்

கொழும்புத்துறை கிழக்கு வசந்தபுரம், மணிப்புரி, உதயபுரம் ஆகிய குடியேற்ற பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடுகாரணமாக மலேரியா நோய் அதிவேகமாகப் பரவி வருவதாகத் தெரியவருகிறது (24)

## யுனிசெவ் உதவியுடன் நகர்ப்புற சுகாதார திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 'யுனிசெவ்' திட்டத்தின் உதவியுடன் நகர்ப்புற அடிப்படை சேவை திட்டத்தின் கீழ் பல திட்டங்களுக்கு அந்த நிறுவனம் அங்கீகாரம் வழங்கியுள்ளது

தாய், சேய் சுகவாழ்வு பயிற்சி நிலையங்களை அமைத்தல், முதலுதவி பயிற்சி கருத்தரங்குகளை நடத்துதல், செயற்கை முறை சத்துணவு வகுப்புக்களை ஒழுங்கு செய்தல், தற்காலிகமான மலசல கூடங்களை அமைத்தல் போன்றவற்றிக்கு 'யுனிசெவ்' அனுமதி அளித்துள்ளது.

இதேவேளை 'யுனிசெவ்' நிறுவனம் இத்திட்டங்கள் அனைத்தும் யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

## ஸ்ரீநகர் திரையரங்கில்... "தமிழோசை"

**தினசரி மாலை**

**4 மணிக்கும் 6 மணிக்கும்**

காண்பிக்கப்படுகிறது. சி-6149

உ

சிவமயம்

## மாட்சி - நயப்பு



### அளவெட்டி - அமரர்

# சந்திரவர் சிதம்பரப்பிள்ளை

## (பொன்னையா மாஸ்ரர்)

(முன்னாள் அதிபர் அருணோதயாக்கல்லூரி)

அமரர் சந்திரவர் - சிதம்பரப்பிள்ளை அவர்கள் அளவெட்டியின் பிதாமகர். பிறந்த மண்ணைப் பெருமைப்பட வைத்தவர். செயற்கரிய செய்த பெரியர், பொன்னையா மாஸ்ரர் எனப் பக்தியுடன் போற்றப்பட்ட அறிவுப் பொற்குடம். ''தோன்றிற் புகழுடன் தோன்றுக'' என்ற தெய்வப் புலவரின் சொல்லை மெய்ப்பித்த தோன்றல்.

ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோன்.
ஆயிரம் பிறை கண்ட அருந்தவத்தோன்.

சந்திரவர் - நாகமுத்து தம்பதியரின் அறிவறிந்த மகனாக (1909-04-09இல்) பிறந்து ''இவன் தந்தை எந்நோற்றான் கொல்'' எனும் சொல் நிலைக்க வாழ்ந்து, ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் சான்றோனாகத் திகழ்ந்து,

அளவெட்டி மக்கள் மட்டுமன்றி அறிவுலகமே பிரிவாற்றாது கலங்கும்படி (1993-02-05இல்) மறைந்த உத்தம சீலர்.

1909-04-09இல் பிறந்து உடையார் பள்ளிக் கூடத்தில் (தற்போதைய அருணோதயாக் கல்லூரி) ஆரம்பக் கல்வி பயின்று, ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் உயர்

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்.

பொருளியல் — திரு. கலாகரன்

| | | | |
|---|---|---|---|
| 93 | Sat - Sun | 10 - 11 | பாடத்திட்டம் |
| | ,, | 12 - 1 | பாடத்திட்டம் |
| | ,, | 1 - 2 | வினாவிடை |
| 94 | ,, | 11 - 12 | பாடத்திட்டம் |

(சி-6139)

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

### திரு. மாணிக்கம் ஜெயசிங்கம்

தோற்றம் : 26-03-1966
மறைவு : 07-03-1987

நீ மறைந்து ஆறு ஆண்டு
நிலவுமிந்த வேளைதனில்
நாம் மறந்து போவோமா
நீ வாழ்ந்த காலங்களை
அன்பின் ஜெயாவே,
தாய் வருந்தி தத்தளிக்கும்
தாங் கொணணாச் சோக நிலை
நீ அறியாய் ஜெயாவே.

உன் பிரிவால் துடிக்கும்

தாய், அண்ணா, தங்கை,
மைத்துனன்,
மருமகள்மார், நண்பர்கள்.

வன்னிய சிங்கம் வீதி,
கைதடி வடக்கு,
கைதடி,

(4404)

## அந்திவானம் பதிப்பகம்

(ஸ்கிறின் பிரின்டிங்)

உங்களுக்குத் தேவையான ஸ்கிறின் பிரின்டிங் வேலைகள் தரமாகச் செய்து கொடுக்கப்படும்.

பெரியகடை, யாழ்ப்பாணம்,

(4393)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-07

1987-ம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை- விநாயகபுரம், தம்பிலுவில் பகுதியிற் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

அசோக் (தம்பியப்பா சித்திரவேல் - தாண்டியடி, திருக்கோயில் - அம்பாறை)

யாழ் கோட்டை முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலிற் கொல்

இடும் இளங்கோழிகள், தடுப்பு ஊசி போடப்பட்டவை. விற்பனைக்கு உண்டு. தொடர்பு; 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

(4069)

ப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இந்தியத்தூதுக்குழுவினர் நாளை கொழும்பு வரவுள்ளனர்.


## வேலை வாய்ப்பு

அடிக்கும் நிற்றிங் மெசினில் [பின்னல் வேலை] வேலை செய்யத் தெரிந்தவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் வேலை வாய்ப்பு உண்டு.

**15-03-1993 ஆம் திகதிக்கு**

முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல - 184

(சி-6159) மே/பா ஈழநாதம்.


## கலந்துரையாடல்

தற்போது யாழ் மாவட்டத்தில் இருக்கும் கிளிநொச்சி, வவுனியா, முல்லை — மணலாறு, மன்னார் மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் 09/03/1993-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழக கைத்தொழில் பகுதியில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்.

(சி-6158)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஈன்றவள் மடியில் 1974 - 5 - 18



ஈழத்தின் விடிவில் 1992 - 3 - 17

## வீரவேங்கை இளங்குன்றன்

(அப்புலிங்கம் ஜெகதீஸ்வரன்)

(பத்தமேனி அச்சுவேலி)

ஆண்டு ஒன்று சென்றிடினும்
ஆறாது உன் துயரம்
மாண்டனையோ மணலாற்றில்
மறந்தனையோ ஈழ மண்ணை
வித்தாகி விட்டாய் நீ; ஈழ
விடிவிற்காய் முளைப்பாய் நீ;
பத்தாகி உன் வித்து பலகாலம் போராடும்
எத்தாலும் இளங்குன்றே நின் நினைவு
நீங்காது.

7.3.93 ஞாயிற்று இன்று எமது இல்லத்தில் நடைபெறும் 1-ம் ஆண்டு நினைவு நிகழ்வில் சக போராளிகள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

புத்தூர் வடக்கு,
புத்தூர்.

(4409)

# சந்திரவர் சிதம்பரப்பிள்ளை

## (பொன்னையா மாஸ்ரர்)

(முன்னாள் அதிபர் அருணோதயாக்கல்லூரி)

அமரர் சந்திரவர் - சிதம்பரப்பிள்ளை அவர்கள் அளவெட்டியின் பிதாமகர். பிறந்த மண்ணைப் பெருமைப்பட வைத்தவர். செயற்கரிய செய்த பெரியர், பொன்னையா மாஸ்ரர் எனப் பக்தியுடன் போற்றப்பட்ட அறிவுப் பொற்குடம். ''தோன்றிற் புகழுடன் தோன்றுக'' என்ற தெய்வப் புலவரின் சொல்லை மெய்ப்பித்த தோன்றல்.

ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோன்.
ஆயிரம் பிறை கண்ட அருந்தவத்தோன்.

சந்திரவர் - நாகமுத்து தம்பதியரின் அறிவறிந்த மகனாக (1909-04-09இல்) பிறந்து ''இவன் தந்தை எந்நோற்றான் கொல்'' எனும் சொல் நிலைக்க வாழ்ந்து, ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் சான்றோனாகத் திகழ்ந்து,

அளவெட்டி மக்கள் மட்டுமன்றி அறிவுலகமே பிரிவாற்றாது கலங்கும்படி (1993-02-05இல்) மறைந்த உத்தம சீலர்.

1909-04-09இல் பிறந்து உடையார் பள்ளிக் கூடத்தில் (தற்போதைய அருணோதயாக் கல்லூரி) ஆரம்பக் கல்வி பயின்று, ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் உயர் கல்வி பெற்று 17-வது வயதில் தான்படித்த பாடசாலையிலேயே ஆசிரியராகி 20-வது வயதில் மகாரகமை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று அதே வேளையில் லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சைக்குரிய இரண்டு வருடக் கல்வியைத் தனது நுண்மதியால் ஒரு வருடத்தில் பூர்த்தி செய்து சித்திபெற்ற திறமைசாலி.

அருணோதயாக் கல்லூரியில் 42 வருடகாலம் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகப் பல்வேறு பதவிகளில் அரும் பெரும் பணியாற்றி இரண்டு தலை முறை காலம் அளவெட்டிக் கல்விப் பரம்பரையை, கல்விப் பாரம்பரியத்தை உருவாக்கி வளர்த்து உயர்வு கொள்ள வைத்த செந்தண்மையாளன்.

கல்வித்துறையில் மட்டுமன்றிக் கமத் தொழிலிலும் தன்னேரிலாத் தனித்துவம் மிக்க கமக்காரனாகச் ''சுழன்றும் ஏர்ப்பின்னதுலகு'' என்பதை உணர்த்தி வேளாண்மை செய்து விருந்தோம்பி இல்லை யென்னாது வாழ்ந்த வள்ளல்.

சமூக உயர்வுக்காகப் பல பொதுப் பணிகளில் முன்னோடியாக நின்ற மூத்த தலைமகன். இளைஞனாக இருக்கும் போதே அளவெட்டி மகாசனசபையை உருவாக்கி வளர்த்தோரில் ஒருவாரயிருந்தவர். தனது இறுதிவரை அளவெட்டியின் சமய, சமூக கலாசாரப்பணிகளில் வல்லோரையும், நல்லோரையும், உருவாக்கி ஊக்குவித்துத் தோன்றாத் துணையாய் இருந்தவர்.

அடக்கம், பணிவுடமை, இன்சொல்லே அணிகலனாகக் கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய வள்ளல் பொன்னையா மாஸ்ரர் பொற்பதம் போற்றுவோம். ''வாழ்வாங்குவாழ்பவன் எதிர்கால மக்களுக்கு வாழ்க்கை புத்தகமாகின்றான்'' என்பது பொன்மொழி. அதன்படி அவர் அடிக்கடி சொல்லும் வாசி, யோசி, நேசி என்னும் மூன்று சொல் மந்திரத்தை மனதில் கொள்வோம். வாழ்க்கைப் புத்தகமாக மலர்ந்திருக்கும் அவரை வாசிப்போம், அவருள் பொதிந்திருக்கும் மெய்ப்பொருளை யோசிப்போம், அதையே நேசித்து என்றும் நிறைவு காண்போம்.

இன்று (1993 - 03 - 07ல்-) நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையை முன்னிட்டு அவரது ஆன்மா இறைவன் திருவடியில் இன்புற்றிருக்க அளவெட்டி மக்கள் அனைவர் சார்பிலும் இறைவனை வேண்டித் தொழுகின்றோம்.

**அளவெட்டி மகாசன சபை,**
சனசமூக நிலையம்.

(சி - 6141)


**மீண்டும்**

யாழ். நவீன சந்தை முன்பாக புதிய சுவையுடன் தரம் மிகு

**கோழிப் பிரியாணி**

காலை - மாலை முட்டை அப்பம், பால் அப்பம் சுவைத்து மகிழ்ந்திட

**நிக்கோ**

370, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (சி-6148)



பிரின்டிங் வேலைகள் தரமாகச் செய்து கொடுக்கப்படும்.

பெரியகடை, யாழ்ப்பாணம்,

(4393)


## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-07

1987-ம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை- விநாயகபுரம், தம்பிலுவில் பகுதியிற் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

அசோக் (தம்பியப்பா சித்திரவேல் - தாண்டியடி, திருக்கோயில் - அம்பாறை)

யாழ் கோட்டை முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலிற் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு கிளிநொச்சி - வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

துஷ்யந்தன் (தங்கவேலாயுதம் ஜெயக்குமார்-பொலிகண்டி, வல்வெட்டித்துறை- யாழ்.)

யாழ் - காங்கேசன்துறை, கீரிமலைப் பகுதியில் தேசவிரோத குழுவினராற் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான-

நாகலிங்கம் தேவராசா - சின்னத்தம்பி

(நகுலேஸ்வராவீதி, கீரிமலை, காங்கேசன்துறை-யாழ்.)

யாழ் இளவாலைப் பகுதியில் தேசவிரோதக் குழுவினராற் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான-

கதிர்காமு கந்தையா (மயிலங்கூடல், இளவாலை- யாழ்.)

1990-ம்ஆண்டு யாழ்ப்பாணத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப்பிரிந்த-

மேஜர் காண்டீபன் (மகாலிங்கம் காண்டீபன்- கண்டாவளை - கிளிநொச்சி)

1991ஆம் ஆண்டு யாழ்- தச்சன்காட்டுப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

மௌலி (தம்பிராசா தங்கேஸ்வரன் - வெல்லாவெளி- மட்டு.)

மங்கள ஓயாப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

அகிலன்

யாழ்- காங்கேசன்துறை, கீரிமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

காராளசிங்கம் (முருகேசு யோகராசா - சங்கத்தார் வயல், இயக்கச்சி - கிளிநொச்சி)

1992ஆம் ஆண்டு திருமலை - பச்சநூர்முகாம் இராணுவத்தினர் மல்லிகைத்தீவுப் பகுதியிற் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிற் கொல்லப்பட்ட 2 இளைஞர்கள், மற்றும் இதே பகுதி வாசிகள் ஆகிய 3 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6153)

நல்லூர் கிளை நூலகம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

அறிவுக்கு ஏற்றதும், ஒழுக்கத்துக்கு ஏற்றதும், எப்பொழுதும் ஒன்றாகத்தான் இருக்கும்.

— லியோ டால்ஸ்டாய்.

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07- 03- 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

## சிர்கேட்டிற்கு அரசே பொறுப்பு

"சிறிலங்கா பொலீஸாரின் தரக் குறைவிற்கும் ஒழுங்கின்மைக்கும், சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பொலீஸ் படையை இராணுவ மயமாக்கியமையே காரணமாகும்." இவ்வாறு சிறிலங்கா பொலீஸாரின் தரக்குறைவு பற்றி ஆய்வு செய்த சிரேஷ்ட பொலீஸ் சுப்பிரிண்டன் டொனால்ட் மென்டிஸ் தனது அறிக்கைகளில் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 வருட காலத்தில் சிறிலங்கா பொலீஸ் பெரியளவில் வளர்ச்சி கண்டுள்ளபோதிலும் அதன் வளர்ச்சி ஓர் இராணுவ மயமாக்கல் நடவடிக்கையின் ஓர் அம்சமாகவே இடம்பெற்றுள்ளது. அதாவது பொலீஸ் படையும் ஓர் இராணுவப் பிரிவு போன்று செயற்படத் தொடங்கியது. அதற்காக பொலீஸாரின் ஆயுத தளபாடங்களில் மட்டுமல்ல, அவர்களின் கடமைகளிலும், பொறுப்புக்களிலும் கூட மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

ஆனால் இம்மாற்றங்களுக்கும், இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட விளைவுகளுக்கும் முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டும். ஏனெனில் சிங்கள அரசாங்கம் கடைப்பிடித்த இனவாதக் கொள்கையே இதற்கு முக்கிய காரணமாகும். அரசின் இக்கொள்கையினால் சட்டத்தின் காவலராக இருக்க வேண்டிய பொலீஸாரே சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் அவல நிலை உருவாகியது. வேலியே பயிரை மேய்ந்த கதையாக அது இருந்தது.

மேலும் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இலங்கை அவசர கால விதியின் கீழ் ஆட்சி செய்யப்பட்டு வரும் நாடாகும். அண்மையில் பாராளுமன்றத்தில் பேசிய ஓர் எம். பி.யும் இதைப் பற்றிப் பிரஸ்தாபித்திருந்தார். இதனால் நீண்ட காலம் அவசர காலச் சட்டத்தின் கீழேயே பொலீஸாரும் கடமை ஆற்ற வேண்டியிருந்தது. இதனால் சிவில் சட்டங்களை இலகுவாக மறக்கவும்,

## சமகாலத்தின் பிரதிபலிப்பாக கலை இலக்கியம் திகழட்டும்

### -வெ. இளங்குமரன்

(யாழ்ப்பாணம்)

ஒரு நாட்டின் கலை இலக்கியங்கள் சிறப்பாக இருக்க வேண்டுமாயின் அவை அக்காலச் சம்பவங்களைப் பிரதிபலிப்பனவாக இருக்கவேண்டும். இவ்வாறு சங்ககால இலக்கியங்கள் அக்காலத்தைச் சிறப்பாக பிரதிபலித்து இருந்தன. அதுபோலவே இக்கால இலக்கியங்களும் இக்காலத்தை பிரதிபலிப்பனவாக விளங்க வேண்டும் என தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் தெரிவித்தார்.

யாழ். இந்துக்கல்லூரியின் தமிழ்ச்சங்கம் நடாத்திய தமிழ் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தனிய ஆயுதம் தாங்கித்தான் போராட வேண்டும் என்ற அவசியம் இல்லை. விடுதலைக்கு பல வழிகளில் உழைக்கமுடியும். தமிழீழ விடுதலையின் முக்கிய அம்சமான மொழியை வளர்க்கப் பாடுபடலாம்.

தற்போது பாடசாலை மாணவர்களுக்கிடையே மொழிஆர்வம் குன்றிவருவது கவலை தருகிறது. பாடசாலைப் புத்தகங்களில் தமிழ் இலக்கணத்தின் பங்கு மிகவும் குறைக்கப்பட்டுள்ளதுடன் பரீட்சை வினாத்தாள்களில் இலக்கணம் சம்பந்தமானகேள்விகள் அதிகம் வருவதில்லை. இதற்காகவே நாம் தமிழ் மொழிவளர்ச்சியில் ஈடுபட்டுள்ளோம். இதன்ஒருகட்டமாகவே 5000 பேருக்கு தமிழ்ப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சிக்கழகம் அமைக்கப்பட்டுள்ளதோடு 1000 சொற்கள் வடமொழியிலிருந்து தமிழ்மொழிக்கு மாற்றப்பட்டுள்ளன. பல அமைப்புகளுக்கு தனித் தமிழ்ப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்ட அவர் விரைவில் தமிழ் அகரமுதல் நூல் ஒன்றையும் வெளியிடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## தமிழ் சங்கப் போட்டி யாழ்.இந்துவிற்கு பரிசில்கள்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினர் கடந்த ஆண்டில் நடாத்திய போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் பலர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற கவிதை முதனிலைத் தேர்வில் முதற் பரிசில் செல்வன் மணிமாறனுக்கும் மொழித்திறன் இடைநிலைத் தேர்வில் 2-ம் பரிசு செல்வன் கிருஷ்ணபிள்ளை குருபரனுக்கும். பிரதேச நாவன்மை இடைநிலைத் தேர்வில் 1-ம் பரிசு செல்வன் கி.குருபரனுக்கும், 3-ம் பரிசு செல்வன் அருளானந்தம் குகதாசனுக்கும் கிடைத்துள்ளது. பிரதேச நாவன்மை உயர்தரத்தேர்வில் 2-ம் பரிசு செல்வன் கருணாநிதி ஜெயநிதியும் மொழித்திறன் உயர்தரத் தேர்வில் திறமைச் சான்றிதழ் செல்வன் நடனசண்முகம் கௌரிதாசனும் பெறுகிறார்கள்.

## கறுப்புஉடை அணிந்தோரால் சந்திரிகா மிரட்டல்

சிறிலங்கா மக்கள் கட்சியின் முன்னாள் தலைவர் காலஞ்சென்ற விஜயகுமாரணதுங்காவின் ஞாபகார்த்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த அவரது மனைவி சந்திரிகா குமாரணதுங்காவை கறுப்பு உடை அணிந்த மூவர் மிரட்டியதாக மருதானை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில், முன்னாள் மக்கள் கட்சித் தலைவர் விஜய குமாரணதுங்காஞாபகார்த்தக்கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்காக சென்ற தம்மை, கூட்டத்திலிருந்து அப்புறப்படுத்தவும் இவர்கள் முயன்றதாக அவர் தமது புகாரில் மேலும் கூறியுள்ளார்.

திலக் கருணாரத்னாவின் சகாக்கள் எனக் கூறிக்கொண்ட கறுப்புடை அணிந்த இம் மூவரும், பெப்ரவரி 20-ம் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கும் 4.00 மணிக்கும் இடையில் ஆனந்தாக் கல்லூரியின் குலரத்ன மண்டபத்தில் விஜய குமாரணதுங்கா ஐந்தாவது ஆண்டு நினைவுதினக் கூட்டம் நடந்தபோது மது போதையில் வந்து கதிரையுடன் தம்மை அப்புறப்படுத்த முனைந்ததாகவும் திருமதி சந்திரிகா தமது புகாரில் தெரிவித்துள்ளார்.

## புதுக்குளம் பகுதியில் இரு தமிழர் கைது

வவுனியாவில் கடந்த 20-ம் திகதி காலை புதுக்குளம் பகுதியில் பதுங்கியிருந்த இராணுவத்தினர், வீதியில் சென்று கொண்டிருந்த இரு குடும்பஸ்தர்களை கைது செய்துள்ளனர். தினம் அங்குள்ள வீதியால் சென்று கொண்டிருந்த இருவரையும் அவர்கள் கைது செய்து சென்றனர்.

நேசன் என்ற கிடாச்சூரி

### கஞ்சாச்செடி கண்டுபிடிப்பு

(தென்மராட்சி)

அண்மையில் நுணாவில் கொல்லம் கிராயன் பகுதியில் உள்ள தோட்டத்தில் கஞ்சாக் கன்று நட்டவர் சாவகச்சேரி தமிழீழ காவல்துறையினரிடம் அகப்பட்டார்.

இவர் தனது தோட்டத்தினுள் மிளகாய்க் கன்று பயிரிட்டபோது கஞ்சாக் கன்றையும் பயிர்செய்து வந்துள்ளார். இவருடன் இன்னுமொரு நபர் கூட்டுச்சேர்ந்துள்ளார். இதை அறிந்த காவல்துறையினர் திடீரென சென்று கையும் மெய்யுமாகப் பிடித்து விட்டனர். பின்பு இவர்களுக்கு குற்றப்பணம் அறவிடப்பட்டது.

### வைத்திய பரிசோதனை

[தொல்புரம்]

சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தொழுநோய், சருமநோய் பரவாவண்ணம் வைத்திய பரிசோதனை சுகாதாரப் பகுதியினரால் நடாத்தப்பட்டு வருகிறது.

மேற்படிவைத்திய பரிசோதனை கடந்தவெள்ளியா/தொல்புரம் அ. மி. த. க. பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்டதென சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு.க. கந்தையா அவர்கள் தெரிவித்தார். [36]

### சைக்கிள் திருட்டு

அளவெட்டிப்பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கையால்

## உரிமை பெற்று எம்மகளிர் இன்புறுநாள் எந்நாளோ?

என்னருமைத் தமிழீழத் தாயகத்தில்
ஏற்றமிகு கல்விகலை ஞானமொடு
நன்னருமைப் போர்க்கலையும் நன்கேகற்று
நாட்டுடனே நல்லறமும் நலமேகாத்து
உன்னதமாய் உரிமைகளைப் பெற்றவராய்
உலகத்தில் ஒருவாழ்வு வாழ்ந்திங்கே
இன்புற்றார் எம்மகளிர் எனமற்றோர்
இயம்பிடநான் கேட்டிடுநாள் எந்நாளோ?

நாயன்மார்கட்டு இ. குகதாசன்

### விளையாட்டு

யா / புனித சாள்ஸ் மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி பி. ப. 2 மணியளவில் யா/ புனிதசாள்ஸ்மகாவித்தியாலய ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் கல்லூரி அதிபர் திருமதிபி. எல். சின்னத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

❋ ❋

[சாவகச்சேரி]

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடாத்தப்படும் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிஇன்று மட்டுவில் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். [மு]

❋ ❋

யாழ். வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் வெள்ளி பி. ப. 2 மணிக்கு அதிபர் திருமதி ப. இராசரத்தினம் தலைமையில் சைவப்பிரகாச வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறும். வரணிக் கொத்தணி அதிபர் திரு. சி. துரைராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

❋ ❋

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களிற்கிடையே நடாத்தப்பட்ட எல்லே வலைப்பந் தாட்டச் சுற்றுப் போட்டிகளில் சாவகச்சேரி றிக்ரியேஷன் விளையாட்டுக் கழகம் சாம்பியனாகியது. [மு]

❋ ❋

[கொழும்பு]

1995, 96 உலகக் கிண்ணக் கோப்பை கிரிக்கட் போட்டிகளை இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கையின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைகள் நடாத்தவுள்ளன.

### கருத்தரங்கு

சமூக சேவையாளர்கள் சுகாதார இலாகா ஊழியர்கள் வழங்கும் 'சுகாதார முன்னேற்றத்தில் யோகாப்பியாசத்தின் அவசியம்' என்ற தலைப்பின் கீழ் இடம்பெறும் சமூக சுகாதாரக் கருத்தரங்கு இன்று மு.ப. 9மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும். (6)

### வைர விழா

யாழ். மீசாலை விக்கினேசுவர மகா வித்தியாலய வைரவிழா எதிர்வரும்வெள்ளி மு.ப 9மணிக்கு வித்தியாலய வைரவிழா அரங்கில் நடைபெறும். திரு. இரா. சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராகவும், திரு. பொ. வீரபத்திரன் சிறப்பு விருந்தினராகவும், திரு. க. சந்திரசேகரா விசேட விருந்தினராகவும் கலந்து கொள்வர், (6)

### கண்காட்சி

மகளிர் அபிவிருத்தி நிலையம் அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள உள்ளூர் வளங்களில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளின் கண்காட்சி இன்று காலை 9 மணி முதல் மாலை 7மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும். (6)

### "அரிச்சந்திரா" மேடையேற்றம்

திரு. சாந்தன் அரிச்சந்திரனாகவும், அரியாலையூர் திரு. செல்வம் சந்திரமதியாகவும் பாகமேற்று நடிக்கும் 'அரிச்சந்திரா - மயான காண்டம்' நாடகம் யாழ். புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் இன்று மேடையேறவுள்ளது. (6)

### திருக்குறள் விழா

கோப்பாய் ஞானபண்டித சைவவிருத்திச் சங்கம் நடாத்தும்திருக்குறள்விழாஎதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி. ப. 4.30 மணிக்கு வைத்திய கலாநிதி ம. நல்லைநாதன் தலைமையில் யாழ். கோப்பாய் சரவணபவானந்த வித்தியா

புக்களிலும் கூட மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

ஆனால் இம்மாற்றங்களுக்கும், இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட விளைவுகளுக்கும் முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டும். ஏனெனில் சிங்கள அரசாங்கம் கடைப்பிடித்த இனவாதக் கொள்கையே இதற்கு முக்கிய காரணமாகும். அரசின் இக்கொள்கையினால் சட்டத்தின் காவலராக இருக்க வேண்டிய பொலீஸாரே சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் அவல நிலை உருவாகியது. வேலியே பயிரை மேய்ந்த கதையாக அது இருந்தது.

மேலும் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இலங்கை அவசர கால விதியின் கீழ் ஆட்சி செய்யப்பட்டு வரும் நாடாகும். அண்மையில் பாராளுமன்றத்தில் பேசிய ஓர் எம். பி.யும் இதைப் பற்றிப் பிரஸ்தாபித்திருந்தார். இதனால் நீண்ட காலம் அவசர காலச் சட்டத்தின் கீழேயே பொலீஸாரும் கடமை ஆற்ற வேண்டியிருந்தது. இதனால் சிவில் சட்டங்களை இலகுவாக மறுக்கவும், மறக்கவும் அவர்களால் முடிந்தது. பொலீஸார் தாம் விரும்பியதைச் செய்ய அவசர காலச் சட்டங்களை பயன்படுத்திக் கொண்டனர்.

இதேவேளை பொலீஸாரின் சட்ட விரோதச் செயல்களுக்குப் பாதுகாப்பு வழங்கவும், அதனை ஊக்குவிக்கவுமென பயங்கரவாதத் தடைச் சட்டங்கள் போன்றவற்றை சிறிலங்கா அரசாங்கம் உருவாக்கி அவர்களின் இந்நடவடிக்கைகளுக்கு ஊக்கமும், ஒத்தாசையும் வழங்கியது.

ஆனால், கடந்த பத்து வருடத்தில் பொலீஸ் மட்டும் இராணுவ மயமாக்கப்படவில்லை. சிறிலங்கா அரசியல், பொருளாதாரம் யாவுமே இராணுவ மயமாக்கப்பட்டன. இக்காலத்தில் அரசியலில் இராணுவத்தின் பலம் படிப்படியாக வளர்ந்து இன்று தட்டிக் கழிக்க முடியாத, ஒரு சக்தியாக உருவாகியுள்ளது. இராணுவத்தை முரண்பட்டு அரசியல் நடத்த முடியாது என்ற நிலை தெளிவாக உருவாகியுள்ளது.

இதேபோன்று பொருளாதாரமும் இன்று இராணுவத்திற்கேற்ப மாற்றப்பட்டுள்ளது என்றே கூறலாம். தேசிய வருமானத்தில் சுமார் 7 வீதம் சிறிலங்கா அரசு இராணுவத்திற்கென செலவீடு செய்கின்றது. இது உலக நாடுகளின் சராசரி செலவீட்டை விட அதிகமாகும். அத்தோடு, இராணுவத்தின் பாவனைக்கென அரச வளங்கள் யாவும் திருப்பி விடப்பட்டுள்ளன.

அதாவது, இராணுவ மயமாகியுள்ள சிறிலங்கா அரச இயந்திரத்தில் பொலீசும் சிக்கிப் போயுள்ளது என்பதே யதார்த்த நிலையாகும். இதற்குத் தனியாக பொலீஸ் உத்தியோகத்தர்களில் பழியைப் போடுவதினால் தீர்வு ஏதும் கிட்டிவிடப் போவதில்லை. அரசியல் பிரச்சினை ஒன்றை இராணுவத்திற்குரியதொன்றாக்கிய தன் விளைவு இது. இதனை இனிக் களைவதானால் அரசியற் பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட வேண்டும். ஆனால், அரசு செல்லும் வழி அதைக் காட்டுவதாக இல்லை. அரசு மேலும் இராணுவ மயமாக்கலிலேயே ஈடுபட்டுள்ளமையால் எதிர்காலத்தில் இதைவிட மோசமான பல விடயங்களை சந்தித்து ஆக வேண்டிதுய தவிர்க்க முடியாதது.

---

குமாரணதுங்காவை கறுப்பு உடை அணிந்த மூவர் மிரட்டியதாக மருதானை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில், முன்னாள் மக்கள் கட்சித் தலைவர் விஜய குமாரணதுங்கா ஞாபகார்த்தக்கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்காக சென்ற தம்மை, கூட்டத்திலிருந்து அப்புறப்படுத்த இம் மூவரும், பெப்ரவரி 20-ம் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கும் 4.00 மணிக்கும் இடையில் ஆனந்தாக் கல்லூரியின் குலரத்ன மண்டபத்தில் விஜய குமாரணதுங்கா ஐந்தாவது ஆண்டு நினைவுதினக் கூட்டம் நடந்தபோது மது போதையில் வந்து கதிரையுடன் தம்மை அப்புறப்படுத்த முனைந்ததாகவும் திருமதி சந்திரிகா தமது புகாரில் தெரிவித்துள்ளார்.

## புதுக்குளம் பகுதியில் இரு தமிழர் கைது

வவுனியாவில் கடந்த 20-ம் திகதி காலை புதுக்குளம் பகுதியில் பதுங்கியிருந்த இராணுவத்தினர், வீதியில் சென்று கொண்டிருந்த இரு குடும்பஸ்தர்களை கைது செய்துள்ளனர் இவர்களின் நிலைகுறித்து அறியமுடியாதுள்ளதனால் உறவினர்கள் கவலையடைந்துள்ளனர்.

பேயாடி கூழாங்குளம் இராணுவ முகாம் பகுதியிலிருந்து புறப்பட்டு அதிகாலையிலேயே புதுக்குளம் பகுதியில் வந்து இராணுவத்தினர் பதுங்கியிருந்துள்ளனர். அன்றைய தினம் அங்குள்ள வீதியால் சென்று கொண்டிருந்த இருவரையும் அவர்கள் கைது செய்து சென்றனர்.

நேசன் என்ற கிடாச்சூரி பகுதியைச் சேர்ந்தவரும், வி. காசிப்பிள்ளை என்ற கோவில் புளியங்குளம் பகுதியைச் சேர்ந்தவர்களுமே இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்,

இவர்களின் நிலையை அறிய முடியாமல் உறவினர்கள் அலைவதை அவதானிக்க முடிகிறது. (தி)

---

குற்றப்பணம் அறவிடப்பட்டது.

### வைத்திய பரிசோதனை

[தொல்புரம்]

சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தொழுநோய், சருமநோய் பரவாவண்ணம் வைத்திய பரிசோதனை சுகாதாரப் பகுதியினரால் நடாத்தப்பட்டு வருகிறது.

மேற்படிவைத்திய பரிசோதனை கடந்தவெள்ளியா/தொல்புரம் அ. மி. த. க. பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்டதென சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு.க. கந்தையா அவர்கள் தெரிவித்தார். [36]

### சைக்கிள் திருட்டு

அளவெட்டிப்பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து இணுவில் பகுதியில் வசித்துவந்த ஜெயக்குமார் என்பவருடைய இரண்டு புதிய சைக்கிள்கள் அண்மையில்களவாடப்பட்டுள்ளன.

இரவு வேளை வீட்டின் பின்புற விறாந்தையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள்களே திருடப்பட்டுள்ளன.

---

கொத்தணி அதிபர் திரு. சி. துரைராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

❋ ❋

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களிற்கிடையே நடாத்தப்பட்ட எல்லே வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் சாவகச்சேரி றிக்றியேஷன் விளையாட்டுக் கழகம் சாம்பியனாகியது. [மு]

❋ ❋

[கொழும்பு]

1995, 96 உலகக் கிண்ணக் கோப்பை கிரிக்கட் போட்டிகளை இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கையின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைகள் நடாத்தவுள்ளன.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை, மேற்கு இந்தியா, சிம்பாப்பே ஆகிய சர்வதேச கிரிக்கட் அமைப்பின் உறுப்பு நாடுகளுடன் வேறு மூன்று நாடுகளும் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன.

---

காலை 9 மணி முதல் மாலை 7மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும். (6)

### "அரிச்சந்திரா" மேடையேற்றம்

திரு. சாந்தன் அரிச்சந்திரனாகவும், அரியாலையூர் திரு. செல்வம் சந்திரமதியாகவும் பாகமேற்று நடிக்கும் 'அரிச்சந்திரா - மயான காண்டம்' நாடகம் யாழ். புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் இன்று மேடையேறவுள்ளது. (6)

### திருக்குறள் விழா

கோப்பாய் ஞானபண்டித சைவவிருத்திச் சங்கம் நடாத்தும்திருக்குறள்விழாஎதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி. ப. 4.30 மணிக்கு வைத்திய கலாநிதி ம. நல்லைநாதன் தலைமையில் யாழ். கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய சிதம்பரப்பிள்ளை அரங்கில் நடைபெறும்.

### ஆரம்பவிழா

இன்று காலை 10.30 மணிக்கு செண்மேரிஸ் சனசமூக நிலையத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள கவின் கலை பயிலகத்தின் ஆரம்ப நிகழ்ச்சிகள் நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

---

தமிழகத்தில்தொழில்வளர்ச்சி குன்றியுள்ளது

## மாநில அமைச்சர் முன்னிலையில் மத்திய அமைச்சர் விபரிப்பு

[சென்னை]

தமிழர்கள் தங்களின் பழம் பெருமைகளை மட்டும் நினைத்துக் கொண்டிருக்காமல் தமிழ்நாட்டின் எதிர்காலநலன் கருதியும் பாடுபட முன்வர வேண்டும் என்று அண்மையில் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய இந்தியமத்தியதொழில் துறை இணை அமைச்சர் எம். அருணாசலம் கேட்டுக் கொண்டார்.

அம்மாநாட்டில் மலரை வெளியிட்டுப் பேசிய அமைச்சர் அருணாசலம் மேலும் கூறுகையில், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி குன்றி வருவதாகவும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் தமிழர்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசிய மாநில நிதி அமைச்சர் நெடுஞ்செழியன், தனித்தன்மை வாய்ந்த தமிழர்களின் பண்பாட்டு பாரம்பரியமுள்ள தமிழர்கள் நவீன விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றில் தங்களுக்குள்ள அறிவை மேம்படுத்தி மாநிலத்தின் தொழில் வளம் பெருக பாடுபட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## வாழப்பாடி - மூப்பனார் சந்தித்துப் பேச்சு

[சென்னை]

காங்கிரஸ் கட்சியின் மாநிலத்தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தியும், கருப்பையா மூப்பனாரும் கடந்த புதன் கிழமை சந்தித்து உரையாடியுள்ளனர்.

புதுடில்லியில் இருந்து கடந்த செவ்வாய்இரவு ஒரேவிமானத்தில் சென்னைக்கு வந்து திரு. கருப்பையா மூப்பனாரின் இல்லத்தில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். சுமார் இரண்டுமணி நேரம் இவர்களது பேச்சுவார்த்தை தொடர்ந்தது. இவர்கள் பயணம் செய்த விமானத்தில் ஜனதா தலைவர் திரு. சுப்பிரமணிய சுவாமியும் சென்னைக்கு வந்து சேர்ந்துள்ளார். இம் மூன்று தலைவர்களும் ஒன்றாக ஒரே விமானத்தில் பயணம் செய்தது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விழாவில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் கருப்பையா மூப்பனார், கி ஆ.பெ. விசுவநாதம், ம பொ. சிவஞானம் உட்படபலரும் கலந்து கொண்டமை தெரிந்ததே.

### துக்கம் அனுட்டிப்பு

தமிழகத்தின் முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கத்தின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் முகமாக மூன்று நாள் துக்கம் அனுட்டிக்க திராவிட முன்னேற்றக்கழகம் தீர்மானித்துள்ளது. இதனால் இக்கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவிருந்த பொதுக் கூட்டங்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் யாவும் அடுத்த மூன்று தினங்களுக்கு ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

---

பா. ஜனதா- அ.தி.மு-க கூட்டணி ஏற்பட்டால்

## வகுப்பு ஒற்றுமையில் பாதிப்பு ஏற்படலாம்

கருணாநிதி எச்சரிக்கை

(சென்னை)

பாரதீய ஜனதாக் கட்சிக்கும் அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே கூட்டணி உறவு ஏற்படுமானால் அதனால் தமிழகத்தில் நிலவும் வகுப்பு ஒற்றுமைக்கு பாதிப்பு ஏற்படும் என்று தி.மு.க தலைவர் மு. கருணாநிதி திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்தார்.

அவர்அங்குமேலும் பேசுகையில், அண்மையில் அமைச்சர் நெடுஞ்செழியன் இக்கூட்டணி அமைவதில் தவறில்லை என்று பேசியிருப்பதைச் சுட்டிக்காட்டிய கருணாநிதி இதன் மூலம் ஒரு அடிப்படை அமைக்கப்பட்டுள்ளது. தெளிவாகிறதுஎன்றும் தெரிவித்தார்.

இக் கூட்டணி ஏற்பட்டால் தி மு.க. வின் உத்தி எவ்வாறு இருக்கும் என்ற கேள்விக்குப்பதிலளிக்கையில், இதுபற்றி அடுத்த பொதுக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று தெரிவித்தார்.

## விமான விபத்தில் 81 பேர் பலி முன்னாள் யூகோவில் சம்பவம்

[பெல்கிரட்]

முன்னாள் யூகோஸ்லாவியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமான விபத்து ஒன்றில் எண்பத்தொரு பேர் கொல்லப்பட்டனர். மேலும் பதினாறு பேர் காயமடைந்தனர். இரட்டை என்ஜின் கொண்ட ஜாக்வார் 100 ரக விமானம் அடர்த்தியான உறைபனி காரணமாக ஓடு பாதையிலிருந்து ஒகு கிலோ மீற்றர் தூரம் தள்ளி விழுந்து நொருங்கியதால் இவ் விபத்து நேரிட்டது இவ் விமானம் நியூசிலாந்தின் சூரிச் நோக்கி சென்று கொண்டிருந்தது. இந்த விமானவிபத்து தொழில் நுட்பக் கோளாறினால்தான் நேரிட்டது என்றும், நாசவேலை எதுவும் காரணமில்லை என்றும் மாசிடோனியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் கூறியுள்ளார்.

ஈழநாதம்

# அத்தியாவசிய அபிவிருத்தி திட்டம் மட்டுமே அனுமதி

(யாழ்ப்பாணம்)

மக்களிற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தும்படி வடபகுதியில் உள்ள அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேற்படி பகுதிகளில் உள்ள அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் வாழும் மக்களிற்கு மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படும் அபிவிருத்தித் திட்டங்களை இனம்கண்டு அவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்தும்படி அனைத்துப் பிரதேச செயலாளர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களைத் தெரிவுசெய்து அவற்றை எதிர்வரும் ஏப்பிரல் மாதம்14-ம் திகதிமுதல்அமுல் படுத்துவதற்கு வசதியாக தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இதற்கு வசதியாக இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய செயலின் ஒரு பகுதிப் பணம் முற்பணமாக வழங்கப் படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி முற்பணம் அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் நேரடியாக அனுப்பிவைக்கப் படவுள்ளது.

கொழும்பிலிருந்து நேற்று யாழ். திரும்பிய அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் மேற்படி தகவல்களைத் தெரிவித்தார். (க)

## அலங்கார உற்சவம்

(சங்கானை)

சங்கானை - நிகரை அருள்மிகு ஞான வைரவ சுவாமி அலங்கார உற்சவ இறுதிநாள் நிகழ்வுகள் நிகரை இந்து இளைஞர் மன்றத்தினரால் இன்று ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்படவுள்ளது.

15 ஆம் நாள் அலங்கார உற்சவ பூர்த்தி நாளான இன்று காலை சங்காபிஷேகம், விசேட ஆராதனைகளும், நண்பகல் அன்னதான நிகழ்வும் நடைபெறவுள்ளது. விழாவின் இறுதியில் இரவு 9 மணிக்கு கவிதாலயா இசைக்குழுவினரின் இசை அமுதம் நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

## வருடாந்த உற்சவம்

புலோலி கிழக்கு, சந்தா தோட்டம் அருள் மிகு ஸ்ரீ மனோன்மணி (முதலி) அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தின் 11-ம் நாளாகிய இன்று ஞாயிற்றுக் கிழமை காலை, மாசி மகத் தீர்த்த உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.(30)

## நாகர்கோவிலில் நியாய விலைக் கடை

(வடமராட்சி கிழக்கு)

நியாய விலைக் கடையொன்று நாகர்கோவிலில்திறக்கப் பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் வட்டப் பொறுப்பாளர் திரு. சீர்மாறன், அண்மையில் இக் கடையினை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.

மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் நியாய விலையில் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றது. (36)

# அரச திணைக்களங்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் தற்போது நிலவும் பல்வேறு தரத்திலான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப் படவுள்ளது. என்று யாழ். அரசாங்க அதிபர் திரு. கா மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

கொழும்பில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின்போது யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரச திணைக்கள கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் பல்வேறு தரங்களில் பல பதவி வெற்றிடங்கள் இருப்பது குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி உத்தரவிட்டதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து குடாநாட்டில் நிலவும் வெற்றிடங்கள் குறித்து அறிக்கை ஒன்று தயாரிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக அனைத்து திணைக்களத் தலைவர்களிடம் இருந்தும் இவ்விடயம் குறித்த தகவல்கள் பெற்றுக்கொள்ளப் படவுள்ளது என்றும் தெரிய வருகிறது. [க]

# யுத்தத்தை முடித்து வைக்க சிங்களவர் விரும்புகின்றனர்

## 'லங்கா தீப'வின் கணிப்பீட்டு முடிவு

[கொழும்பு]

வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் தற்போது போதியளவு தெளிவுநிலை ஏற்பட்டுள்ளதாகவும், யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவே சிங்கள மக்கள் விரும்புகின்ற போதும் அரசாங்கமும் வெளிநாட்டுச் சக்தியுமே இதனை விரும்பவில்லை என்ற கருத்து நிலவுவதாகவும் லங்கா தீபா பத்திரிகை நடத்தும் 'புதன் சந்திப்பு' என்ற பகுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட மக்கள் மத்தியில் நடத்திய சந்திப்பின் அடிப்படையிலேயே இக்கருத்தை அப்பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இந்த யுத்தம் விரைவில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமேதவிர நீண்டு கொண்டு செல்லக் கூடாது. அரசாங்கம் யுத்தத்தை முடிவுக்குகொண்டு வருவதாக கூறுகின்றது. ஆனால் யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கான ஆயத்தங்களை செய்கின்றது. யுத்தத்தினால் பாதிக்கப்படுவது பொதுமக்களே ஆவர் என்று கருத்துத் தெரிவித்த ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக இன்னும் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்: இந்தயுத்தம் தமிழரினால் தேச பற்றுடன் ஆரம்பிக்கப் பட்டதாகும். வடக்குகிழக்கில் தமிழ் தலைவர்களினாலும், சிங்கள தலைவர்களினாலும் ஏமாற்றப்பட்டுவந்த மக்கள் ஆயுதம் ஏந்தினர். எனவே முதலில் அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்றார். தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டிய ஒன்றாகும். மறுக்கப்பட்டால் மேலும் ஆபத்து ஏற்படும் என்றார்.

இது தொடர்பாக ஒரு பௌத்தகுரு கருத்து தெரிவிக்கையில் நிச்சயம் அரசாங்கம் இந்த யுத்தத்தில் வெற்றியீட்டப் போவதில்லை என்றார். யுத்தத்தினால் ஏற்பட்ட மரண வடுக்கள் இறந்தவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையே பாதித்துள்ளது என்று ஒரு தாய் தெரிவித்துள்ளார்.

# சுத. கட்சி - எதிரணி கூட்டு; அநுரா கோஷ்டி கண்டனம்

(கொழும்பு)

மாகாண சபை தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஏனைய நான்கு கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தமை குறித்து கருத்து முரண்பாடு நிலவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுதந்திரக் கட்சியின் ஒரு குழுவினர் தமது கட்சி தனித்து தேர்தலில் போட்டியிட முடியும் என்றும், எனவே கட்சி வேறு எந்தக்கட்சியுடனும் கூட்டுச்சேர தேவையில்லை என்ற கருத்தைத் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றனர். திரு. அநுரா பண்டாரநாயக்காவை ஆதரிக்கும் இக்குழுவினர், தமது கட்சியின் வாக்குகளினால் ஏனைய உதிரிக்கட்சியை சேர்ந்த உறுப்பினர் நன்மையடைவார்கள் என்றும், இதனை அங்கீகரிக்க முடியாது என்றும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இன்னும் சிலர் தமிழ் கட்சிகளான ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியையும், முஸ்லிம் காங்கிரசையும் கூட்டுச் சேர்க்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றனர். இவ் இரு கட்சியையும் கூட்டுச்சேர்த்தால் ஐ. தே. க. வைநிச்சயமாக தோல்வியடையச் செய்ய முடியும் என்ற கருத்து நிலவுகிறது என தெரியவருகின்றது.

# மரண அறிவித்தல்

## திரு. வேதாரணியம் கார்த்திகேசு

கொடிகாமம்; கச்சாய், பாலாவியைப் பிறப்பிடமாகவும் பூநகரி, ஜெயபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வேதாரணியம் கார்த்திகேசு 19-2-93 அன்று ஜெயபுரத்தில் காலமானார். அன்னார் திருமதி இ. செல்லம்மாவின் அருமைச் சகோதரரும் பாக்கியத்தின் அன்புக்கணவரும், திருமதி சி. சிவபாக்கியம், திரு கா. கணேசமூர்த்தி, திரு. கா. கதிரமலைநாதன், திருமதி க. மகாலஷ்மி ஆகியோரின் அருமைத் தந்தையும் திரு. இ. சிதம்பரப்பிள்ளை, திருமதி க. அமுதரத்தினம், திரு. கமலன், திருமதி க. குகா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-2-93 ஜெயபுரத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்

கோவிலாக்கண்டி, நாவற்குழி.

திருமதி அ. கணேசமூர்த்தி (மருமகள்)

[4411]

# 45-ம் நாள் நினைவஞ்சலி



## குடா நாட்டு

எடுக்கப்படும். இவ்வாறுமூன்று மாதங்களுக்கான கையிருப்பு களஞ்சியப்படுத்தப்படும் வரை மேலதிக கப்பல்கள்மூலம் குடாநாட்டுக்கு உணவுப்பொருள்கள் எடுத்துவரப்படும். இதன் பின்னர் ஒரு சீரான முறையில் கப்பல்மூலம் அத்தியாவசிய உணவுப்பொருள்கள் குடாநாட்டுக்கு எடுத்துவரப்படும்.

மண்ணெண்ணெய்:-

குடாநாட்டில் எரிபொருள்களுக்கு நிலவும் பெரும் தட்டுப்பாடு குறித்து எடுத்துக் கூறப்பட்டது. இதைத்தொடர்ந்து சுமார் 5,000 பீப்பா மண்ணெண்ணெயைக் குடாநாட்டுக்கு எடுத்துச்செல்வதற்குக் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கியுள்ளது. இதைத்தொடர்ந்து ''நில்கிரி'' என்ற கப்பல் 1,500 பீப்பா மண்ணெண்ணெயுடன் குடாநாட்டை நோக்கி வரவுள்ளது. இக் கப்பல் மண்ணெண்ணெயைஇங்கு இறக்கிவிட்டு மீண்டும் கொழும்பு சென்று மிகுதி மண்ணெண்ணெய்யை ஏற்றிக் கொண்டு குடாநாட்டுக்கு

## தற்கொலை

புலோலி தெற்கு சாரையடியைச்சேர்ந்த, அருணாசலம் தனபாலசிங்கம் (வயது 56) என்பவர் ஆலய கிணற்றினுள் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்,

இச் சம்பவம், கடந்த 3-ம் திகதி புலோலி புற்றளை பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது. (30)

## கடலில் வீழ்ந்து குழந்தை மரணம்

வீட்டு முற்றத்தில் தவழ்ந்து விளையாடிய குழந்தை ஒன்று அருகில் உள்ள கடலில் தவறி வீழ்ந்து பரிதாபமாக மரணமானது.

இச்சம்பவம் கடந்த 2-ம் திகதி நண்பகல் பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவில் இடம்பெற்றது. அரசரட்ணம் ராஜினி (ஒன்றரை வயது) என்னும் பெண் குழந்தையே மரணமாகியுள்ளது. (30)

## சர்வதேச

டப்பட்டுள்ளன. பல வீதிகளின் பிரதான சந்திகளில் மகளிர்

## மலேரியாவினால்

இராணுவப் பகுதிக்குச் செல்ல மறுத்த

# உதவித் தபாலதிபருக்கு சம்பளம் நிறுத்தம்

[சுன்னாகம்]

இளவாலைப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ அனர்த்தங்களால் இடம் பெயர்ந்து வந்த இளவாலை உதவி தபால் நிலைய அதிபரை, மீளவும் இளவாலைக்குச் சென்று பணிபுரியுமாறு மேலிடத்திலிருந்து வந்தஉத்தரவை ஏற்று அப்பகுதிக்குசென்று பணிபுரிய மறுத்ததை அடுத்து மேற்படி உதவித்தபாலதிபருக்கு கடந்த 01-02-93 இல் இருந்து சம்பளம் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவப் பிடிக்குள் கடமையாற்றுமாறு பல தடவை வற்புறுத்தல் கடிதங்கள் வந்ததாகவும், இதற்கு இணங்க

## கடற்படையின்

வருகின்றது.

இவர்கள் சுகயீனம் அடைந்தால் விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளிப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

றோகண விஜேவீரவினால் பல பாதுகாப்பு படையினரின் குடும்பங்கள் அளிக்கப்பட்டதால், பாதுகாப்பு படையினர் இவர்களுக்கு எதுவும் பாதக

அன்று ஜெயபுரத்தில் காலமானார். அன்னார் திருமதி இ. செல்லம்மாவின் அருமைச் சகோதரரும் பாக்கியத்தின் அன்புக்கணவரும், திருமதி சி. சிவபாக்கியம், திரு. கா. கணேசமூர்த்தி, திரு. கா. கதிரமலைநாதன், திருமதி க. மகாலஷ்மி ஆகியோரின் அருமைத் தந்தையும் திரு. இ. சிதம்பரப்பிள்ளை, திருமதி க. அமுதரத்தினம், திரு. கமலன், திருமதி க. குகா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-2-93 ஜெயபுரத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்

கோவிலாக்கண்டி, நாவற்குழி. — திருமதி அ. கணேசமூர்த்தி (மருமகள்)

[4411]

---

# 45-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 30 — 12 — 1981

மறைவு: 22 — 01 — 1993

எம் இதயக் கோவிலில் என்றும்
இவள் ஓர் அணையாத தீபம்

## செல்வி
## கார்த்திகா பத்மநாதன்

[யா/இடைக்காடு மகாவித்தியாலய மாணவி)

கொட்டு நிலவொளியும் கோலக் குயில் மொழியும்
மொட்டு மலர் மணமும் முறுவலதன் மோகனமும்
விட்டுப் பிரிவதுவோ மேதினியில் கார்த்திகா
தொட்டுணர வியலாத்
திருச்சுடரானாளோ?

வெள்ளை மலரிதழ்கள் மேன்மையுறு சிந்தை
கள்ளமிலா பேரன்பும் காவியத்தி னோவியமே
பள்ளிக்குச் செல்கையிலே பாழும் லொறி மோதி
கிள்ளிப் பறித்ததுவோ தேகம் பதை பதைக்க

முல்லைப் பூவிழி யசைத்துன் மோகனப்
புன்னகையால்
எல்லையில்லாப் பேரின்பப் பேற்றை எமக்களித்து
வெல்லத் தமிழ் நாணும் சொல்லாட்சி
கொண்டிருந்த
செல்வத் திருமகளை வீதியிலே நாமிழந்தோம்.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அக்காமார்
மற்றும் உறவினர்கள்

[சி-6162]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

பின்னர் ஒரு சீரான முறையில் கப்பல்மூலம் அத்தியாவசிய உணவுப்பொருள்கள் குடாநாட்டுக்கு எடுத்துவரப்படும்.

**மண்ணெண்ணெய்:-**

குடாநாட்டில் எரிபொருள்களுக்கு நிலவும் பெரும் தட்டுப்பாடு குறித்து எடுத்துக் கூறப்பட்டது. இதைத்தொடர்ந்து சுமார் 5,000 பீப்பா மண்ணெண்ணெயைக் குடாநாட்டுக்கு எடுத்துச்செல்வதற்குக் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கியுள்ளது. இதைத்தொடர்ந்து ''நில்கிரி'' என்ற கப்பல் 1,500 பீப்பா மண்ணெண்ணெயுடன் குடாநாட்டை நோக்கி வரவுள்ளது. இக் கப்பல் மண்ணெண்ணெயைஇங்கு இறக்கிவிட்டு மீண்டும் கொழும்பு சென்று மிகுதி மண்ணெண்ணெய்யை ஏற்றிக் கொண்டு குடாநாட்டுக்கு வரும் என்று கூறப்படுகிறது. இவ்வாறு 5000 பீப்பா மண்ணெண்ணெய்யும் எடுத்து வரப்பட்டதும் குடாநாட்டுக்கு மேலும் தொடர்ச்சியாக மண்ணெண்ணெய் அனுப்புவது குறித்து ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இராணுவத்தாக்குதல்.**

யாழ்.குடாநாட்டில் பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது அநாவசியமாகவும் தொடர்ச்சியாகவும் நடாத்தப்பட்டு வரும் இராணுவத்தினரது எறிகணைத் தாக்குதல் குறித்தும், விமானப்படையினது விமானக் குண்டுத் தாக்குதல்கள் குறித்தும் இவ்வாறான தாக்குதல்களால் அப்பாவிப் பொதுமக்கள் தொடர்ச்சியாக எதிர்நோக்கிவரும் சிரமங்கள் பற்றியும் அரச அதிபரினால் திரு. பிரேமதாசாவிடம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

**போக்குவரத்து:**

அத்துடன் குடாநாட்டு மக்கள் குடாநாட்டுக்கு வெளியேயும் உள்ளேயும செல்வதற்காக நீண்டநாட்களாக எதிர்நோக்கிவரும் சிரமங்கள் குறித்தும் அரச அதிபர் எடுத்துக் கூறியுள்ளார். மேற்படிவிடயங்கள் குறித்து அறிந்து கொண்ட ஜனாதிபதி இவ்விடயங்களை பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரும்படி தனது செயலாளர் திரு. விஜயதாசாவுக்கு உத்தரவிட்டுள்ளார் என்றும் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். [க]

---

## புற்றுநோயாளர்

ஆரம்பகாலத்தில் கண்டு பிடிக்கப்பட்டால் மரண வீதத்தை பெருமளவில் குறைக்க முடியும் என்று வடமாகாண புற்றுநோய் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். [நி]

---

செய்து கொண்டுள்ளார்.

இச் சம்பவம், கடந்த 3-ம் திகதி புலோலி புற்றளை பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது. (30)

## கடலில் வீழ்ந்து குழந்தை மரணம்

வீட்டு முற்றத்தில் தவழ்ந்து விளையாடிய குழந்தை ஒன்று அருகில் உள்ள கடலில் தவறி வீழ்ந்து பரிதாபமாக மரணமானது.

இச்சம்பவம் கடந்த 2-ம் திகதி நண்பகல் பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவில் இடம்பெற்றது. அரசரட்ணம் ராஜினி (ஒன்றரை வயது) என்னும் பெண் குழந்தையே மரணமாகியுள்ளது. (30)

---

## சர்வதேச

டப்பட்டுள்ளன. பல வீதிகளின் பிரதான சந்திகளில் மகளிர் தின வீதி வளைவுகள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் எழிச்சியூட்டும் வாசகங்களையும் உள்ளத்தை ஊடறுக்கும் கருத்துக்களைச் சித்தரிக்கும் ஓவியங்களைத் தாங்கியதுமான பல சுவரொட்டிகள் தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன. மகளிர் தினத்தை எழிச்சியுடன் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நேற்றுடன் நிறைவடையும் நிலையில் காணப்பட்டன.

யாழ். குடாநாட்டில் மகளிர் தினத்தையொட்டி மாபெரும் எழிச்சிப்பேரணி ஒன்றும் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற உள்ளது. நாளை மாலை 2. 30 மணியளவில் கோண்டாவிலில் இருந்து ஆரம்பமாகும் எழிச்சிப்பேரணி பலாலி வீதியூடாக யாழ். பல்கலைக்கழகத்தை வந்தடையும்.

பல்கலைக்கழக மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது. இவ் எழிச்சிப்பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் அதிகளவு மக்கள் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

---

## துப்பாக்கிச்

புரியாமல்இருப்பதாகபொலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றது.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து மக்கள் பதற்றம் காரணமாக சந்தையை விட்டு வெளியேறினார்கள் என்றும் தெரிய வருகின்றது,

---

## இலஞ்சம்

போது இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான மின்சார உபகரணங்களும் இதர பொருள்களும் இருக்க கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

---

கூட்டுச் சேர்ந்தமை குறித்து கருத்து முரண்பாடு நிலவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுதந்திரக் கட்சியின் ஒரு குழுவினர் தமது கட்சி தனித்து தேர்தலில் போட்டியிட முடியும் என்றும், எனவே கட்சி வேறு எந்தக்கட்சியுடனும் கூட்டுச்சேர தேவையில்லை என்ற கருத்தைத் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றனர். திரு. அநுரா பண்டாரநாயக்காவை ஆதரிக்கும் இக்குழுவினர், தமது கட்சியின் வாக்குகளினால் ஏனைய உதிரிக்கட்சியை சேர்ந்த உறுப்பினர் நன்மையடைவார்கள் என்றும், இதனை அங்கீகரிக்க முடியாது என்றும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இன்னும் சிலர் தமிழ் கட்சிகளான ஈ. பி. ஆர்.

---

## மலேரியாவினால் மரணம்

மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு தனியார்வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த இளம் யுவதி ஒருவர் கடந்த 2-ம்திகதி அங்கு மரணமானார்.

பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவில் வசித்து வந்த செல்வி பானதி பாலசுந்தரம் (வயது 21) என்னும் யுவதியே மரணமானவராவார். (30)

---

## சிறப்புச்

களால் வாசிக்கப்பட்டது. அத்துடன் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கணேஷ் அவர்களும் அடம்பன் அரசாங்க அதிபர் திரு. வரதீர்வரன் மற்றும் நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் திரு. பத்திநாதன் அவர்களும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு ஜேக்கப் அவர்களும் ஏனைய முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

முதல்மூன்று மாணவர்கட்கு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் சார்பில் வெள்ளிப்பதக்கமும் 500 ரூபாய் பணமும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ஜேக்கப் அவர்களால் வழங்கப்பட்டது.

மன்னார் மாவட்டம் சார்பில் 2000 ரூபா பணமும் சான்றிதழும் மடு திறந்த நிவாரண பாடசாலை திரு. பிரான்சிஸ் சேவியர் அவர்களால் சித்தியடைந்த ஐந்து மாணவர்கட்கும் வழங்கப்பட்டன.

தேசிய தலைவரினால் வழங்கப்பட்ட 5000 ரூபாவும் நற்சான்றிதழும் மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி திரு. ஜான் அவர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு மடு திறந்த நிவாரண பாடசாலை ஆசிரியர், மாணவர்களும் பெரும் திரளாக கலந்து கொண்டனர். (12)

---

இரு கட்சியையும் கூட்டுச்சேர் கிறது என தெரியவருகின்றது.

இராணுவப் பகுதிக்குச் செல்ல மறுத்த

## உதவித் தபாலதிபருக்கு சம்பளம் நிறுத்தம்

[சுன்னாகம்]

இளவாலைப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து வந்த இளவாலை உதவி தபால் நிலைய அதிபரை, மீளவும் இளவாலைக்குச் சென்று பணிபுரியுமாறு மேலிடத்திலிருந்து வந்தஉத்தரவை ஏற்று அப்பகுதிக்குசென்று பணிபுரிய மறுத்ததை அடுத்து மேற்படி உதவித்தபாலதிபருக்கு கடந்த 01-02-93 இல் இருந்து சம்பளம் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவப் பிடிக்குள் கடமையாற்றுமாறு பல தடவை வற்புறுத்தல் கடிதங்கள் வந்ததாகவும், இதற்கு இணங்க மறுத்த திரு. நவரட்ணராஜா என்பவருக்கே மேற்படி நிலைமை ஏற்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகிறது. [11,09]

---

## கடற்படையின்

வருகின்றது.

இவர்கள் சுகயீனம் அடைந்தால் விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளிப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

றோகண விஜேவீரவினால் பல பாதுகாப்பு படையினரின் குடும்பங்கள் அளிக்கப்பட்டதால், பாதுகாப்பு படையினர் இவர்களுக்கு எதுவும் பாதகமான செயலை செய்யலாம் என்பதற்கு அஞ்சியே தாம் பாதுகாப்பு வழங்குவதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

---

பருத்தித்துறை வர்த்தகர் சங்கம்,

## அறிவித்தல்

பருத்தித்துறை ஓராம் கட்டைச் சந்தி- நாவலடி, வியாபாரிமூலை கடற்கரை வீதி, துறைமுக வீதி முனை, தும்பளை வீதி, கற்கோவளம் வராத்துப்பளை, உள்ளடங்கிய சகல வர்த்தகர்கள் அனைவரும் சந்தாப் பணமாக ரூபா 25/- செலுத்தி இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

அ. உலகநாதன்
தலைவர், பருத்தித்துறை
வர்த்தகர் சங்கம்

(சி/6160)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 06-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8536

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்.

26-1735, 24-9938, 26-2764, 41-9855, 43-3854; 24-5955, 24-8700, 28-0429, 27-5775, 26-6628, 40-7584, 26-4691, 41-1227, 27-2761

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-5822, 24-9856, 27-1122, 27-5077, 28-3476, 27-6692, 24-5127, 24-4476, 24-0523, 26-8939, 22-0777, 26-3118, 28-0912, 27-4920, 27-5912, 26-2277, 40-2249, 26-5157, 42-1182, 41-9530, 24-1040